Registered as a NewsPaper

இலவசப் பிரதி

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - IV

நாதம் 15 திருவள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி-18 03-09-2004 வெள்ளிக்கிழமை ஓசை -198

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB

Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள், கணினி முறை வீடியோ மிக்சிங், பாடல் பதிவுகள் படம் பிறேம்செய்தல்.

அனைத்திற்கும் பொற்காலம் வண்ணக்கலையகம், யாழ் சாலை, கிளிநொச்சி. (சி-10335)

R.V பந்தல் சேவை, தர்மபுரம்.

## சிறி.இராணுவத்தளபதி யாழ்.விஜயம்
## பாதுகாப்பு நிலவரம் குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டிற்கான இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு சிறிலங்கா இராணுவத் தளபதி சாந்தகொட்டேகொட வருகை தந்துள்ளார். விமானப் படையின் விமானம் மூலம் பலாலி வந்தடைந்த அவர், அங்கு வைத்து யாழ்மாவட்ட இராணுவத் தளபதி உள்ளிட்ட உயரதிகாரிகளுடன் குடாநாட்டின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்ததாகத் தெரியவருகின்றது.

பின்னர் யாழ்நகர்ப்பகுதிக்கு விஜயம் செய்திருந்த அவர், குருநகர் பகுதிக்கு விஜயம் செய்துள்ளார். அங்கு கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பார்வையிட்ட பின் யாழ்.நகரில் ஞானம்ஸ் ஹோட்டல் பகுதியில் அமைந்துள்ள 51-2ஆவது படைப்பிரிவு முகாமிற்கு விஜயம் செய்து அப்பகுதிப் படை அதிகாரிகளுடனும் பேச்சுக்களை நடாத்தியிருந்தார்.

குருநகர் உள்ளிட்ட குடாக் கடலையண்டிய பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தின் 51-2 படைப்பிரிவின்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## அம்பலவன் பொக்கணை மீனவர் மீது சிறிலங்கா கடற்படையினர் தாக்குதல்

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அம்பலவன் பொக்கணைப் பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை வழிமறித்த ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா கடற்படையினர் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; நேற்று முன்தினம் மாலை 5.00 மணியளவில் அம்பலவன் பொக்கணைப் பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற அந்தோனிப்பிள்ளை-டானியல் என்பவரது படகை வழிமறித்த கடற்படையினர் தாக்குதலை மேற்கொண்டனர். அதில் இருந்த மூவரையும் கடலில் குதிக்கும்படி பணித்தனர். இதன் போது தமக்கு நீந்தத் தெரியாது என மீனவர்கள் கூறியபோதும் அதனை ஏற்றுக்கொள்ளாத கடற்படையினர்

(iv ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்.குருநகர் - பாலாவிப் பிரதேச

# மீனவர்களுக்கிடையிலான பிணக்குகள்
# சுமுகமான முறையில் தீர்த்து வைப்பு

## புலிகளின் ஏற்பாட்டில் நடந்த சமரசம்

(பளை)

**பூநகரி பாலாவிக் கடற்பகுதியில் குருநகர் மீன்பிடி றோலர்மீது கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து எழுந்த குழப்பமான சூழ்நிலை இவ்விருபகுதி மீனவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான நேற்றைய கலந்துரையாடல் மூலம் நிவர்த்திக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்தச்சம்பவத்தை தமிழ்த் தேசியத்திற்கெதி ராகப் பயன்படுத்த முற்பட்ட சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையினரதும், சமூக விரோதக் குழுக்களினதும் முயற்சியும் இக்கலந்துரையாடல் மூலம் முறியடிக்கப்பட்டுள்ளது.**

பூநகரி பாலாவிக் கிராம கடற்பகுதியில் குருநகரில் இருந்து வந்த இழுவைப் படகு ஒன்று நடைமுறைகளை மீறி கரையோரத்தில் இழுவைத் தொழில் செய்ய முற்பட்டபோது கரையோர சிறுதொழில் மீனவர்களுக்கும், இழுவைப்படகில் வந்தவர்களிற்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. இதனை அடுத்து போராளிகளிடம் பாலாவி மீனவர்கள் முறைப்பாடு தெரிவித்து அதன்பின் கடற்புலிப் போராளி ஒருவரை அழைத்துக்கொண்டு இழுவைப் படகை நோக்கிச்சென்று படகை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டனர். இந்நிலையில் இழுவைப்படகில் வந்த குருநகர் தொழிலாளிகள் படகை நிறுத்தாது செல்லவே படகை நிறுத்துவதற்காக எச்சரிக்கை வேட்டுத் தீர்க்கப்பட்ட வேளை ரவை தவறுதலாக இழுவைப்படகிலிருந்த தொழிலாளியின் காலைத் தாக்கியது. அத்துடன் எரிபொருள் கொள்கலனில் ரவைபட்டு அது தீப்பிடித்தது.

(iv ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம்-புலிகள் சந்திப்பு
## செவ்வாய்க்கிழமைக்கு பிற்போடப்பட்டது

கண்காணிப்புக் குழுவினர் மேற்கொண்ட கடுமையான முயற்சிகளால் நீண்ட நாட்களுக்குப்பின்னர் இன்று நடைபெற ஏற்பாடாகியிருந்த இச்சந்திப்பு, வருகிற வாரம் செவ்வாய்க்கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிராந்தியத் தளபதியான பிரிகேடியர் விஜிரவிஜேகுணவர்த்தன, தானும் இச்சந்திப்பில் நேரடியாகக் கலந்துகொள்ளும் வகையில் இச்சந்திப்பை வருகிற வாரம் வரைபிற்போடும்படி கண்காணிப்புக் குழுவைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இருதரப்பையும் கலந்தாலோசித்தே இம்முடிவு எடுக்கப்பட்டதாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஒஸ்கார் சோனஸ் தெரிவித்தார்.

## தமிழ்ச்செல்வன்-யு.என்.எச்.சி.ஆர்.பிரதிநிதி
## மீளக்குடியமர்த்தல் தொடர்பாகப் பேச்சு

(கிளிநொச்சி)

யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதிக்கும் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்குமிடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது. சிறிலங்கா அரசு மேற்கொண்ட நீண்டகால அரச பயங்கரவாதப் போரினால் இடம்பெயர்ந்தும், உயர் பாதுகாப்பு வலயங்களை சிறிலங்கா அரசு அமைத்ததால் தங்கள் குடியிருப்புக்களை இழந்தும், இன்னும் தமிழர் நிலத்தை சிறிலங்கா அரசு சூறையாடியதால் தங்கள் கிராமங்களை இழந்தும் தற்காலிகமாக முகாம்களிலும் காடுகளிலும் வீதிகளிலும் வாழும் அப்பாவி மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாகவே இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அகதிகளை மீளக்குடியமர்த்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்திகளைப் பயன்படுத்துவோர் கவனத்திற் கொள்ளவும்

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊர்திகளைப் பாவனைக்கு உட்படுத்தி வருபவர்கள் பின்வரும் நடைமுறைகளைக் கருத்திற் கொள்ளும் வண்ணம் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதிப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் வேண்டியுள்ளனர்.

இதன் பிரகாரம் மேற்படி பகுதிக்குள் ஊர்திகளைப் பயன்படுத்தும் போது ஊர்தியின் முன், பின் பக்கங்களில் ஊர்தி இலக்கம் பொருத்தப்பட்டிருப்பதுடன் நடப்பாண்டிற்கான வரி அட்டையினை தம்வசம் வைத்திருக்கவேண்டும் என்பதனைத் தெரிவித்துள்ளதுடன் சோதனை நிலையத்துக்குச் செல்லும் போது நடப்பு ஆண்டிற்கான வரி அட்டையினையும் எடுத்துச் செல்ல வேண்டுமென மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியின் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

## நோர்வேயின் அனுசரணையில் எமக்கு நம்பிக்கை இல்லை

### -ஜாதிக ஹெல உறுமய பா.உறுப்பினர்

(கொழும்பு)

ஜாதிகஹெல உறுமய பாராளுமன்றக் குழுத்தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் நோர்வேயினர் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அனுசரணையாளரல்ல; அவர்கள் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் எனச் செய்தி முகவர் நிலையத்திற்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், நோர்வே அரசின் அனுசரணையில் தமக்கு நம்பிக்கையில்லை எனவும் குறிப்பிட்டார். நோர்வே நாட்டினரும் ஏனைய போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் நாட்டை விட்டு வெளியேறுவதே தமது கட்சியின் விருப்பம் எனவும் குறிப்பிட்டார். நோர்வே விடுதலைப் புலிகள் போர்த் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பணவுதவி செய்வதாகவும் இவர் குறிப்பிட்டார்.

## நோர்வே வெளிவிவகார அமைச்சுக்கு இல.யின் நிலைமை குறித்து விளக்குவேன்!

### -நோர்வே புறப்படும் முன் டொன்புறூவ் ஹொவ்டே

நான் ஒஸ்லோவில் வெளிவிவகாரத் தலைவர்களைச் சந்தித்து தற்போது இலங்கையில் எழுந்துள்ள நிலைமை பற்றித் தெரிவிப்பேன் என நேற்றிரவு நோர்வே புறப்படும் முன் செய்தியாளர்களிடம் பேசிய யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் டொன்புறூவ் ஹொவ்டே தெரிவித்தார்.

கிழக்கு மாகாண நிலைமை பற்றிக் குறிப்பிடுவதாயின் அது தொடர்பாக இருசாராரும் கலந்துரையாட வேண்டும். இதன் பொருட்டு அடுத்தவாரம் இருசாராருக்கும் இடையில் (iv ஆம் பக்கம் பார்க்க)

மாபெரும் விவசாயக் கண்காட்சியில்
வேளாண் அபிவிருத்திக்கு உறுதுணைபுரியும்
கம்பனிகளை இணைத்து பயன் கொள்ளவைக்கின்றனர்
வன்னி வேளாண் தொழில் நுட்ப நிறுவனத்தினர்

வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம்
THE VANNI AGROTECHS

வேளாண் பொறிகள், கருவிகள் உற்பத்தியில்
100 வருட வளர்ச்சியுள்ள ஜினசேனா கம்பனியில்
வேளாண் தொழில்நுட்ப வேலைத்திட்டங்களை
பொருண்மிய விவசாயக் கண்காட்சியில்
செய்துகாட்டுகின்றனர்

100 வருட வளர்ச்சியில் ஜினசேனா



(10337)

பொருண்மிய விவசாயக் கண்காட்சி

Browns Agriculture
A Division of Brown & Company Ltd

மசி பேக்குசன், ஏபே உழுபொறிகளை
இறக்குமதி செய்து அறிமுகம் செய்து
வன்னிப் பிரதேசத்துக்கு வன்னி வேளாண்
தொழில்நுட்ப நிறுவனத்தினூடாக விநியோகிக்கும்
பிறவுண் அன் கம்பனி விற்பனைக்குப் பிந்திய சேவை
பொருண்மிய விவசாயக் கண்காட்சியில் நடைபெறுகின்றது.

(1033



பொருண்மிய விவசாயக் கண்காட்சி

HAYLEYS AGRO

வேளாண் அபிவிருத்திக்கு உறுதுணை "ஹேலீஸ்" அக்ரோ புரொடக்ஸ்
நிறுவனத்தின் களை,பூச்சி, பங்கசு நாசினிகளும்;
வேளாண் பொறிகளும், கருவிகளும் இவர்களது உற்பத்திதான்
"ஹெய்ஸ்பிறே" தெளிகருவிகள். இவற்றுக்கு
விற்பனைக்குப் பிந்திய சேவையும் பொருண்மிய விவசாயக்
கண்காட்சியில் நடைபெறுகின்றது.



(10338)

பொருண்மிய விவசாயக் கண்காட்சி

மாபெரும் விவசாயக் கண்காட்சியில்
வேளாண் அபிவிருத்திக்கு உறுதுணைபுரியும்
கம்பனிகளை இணைத்து பயன் கொள்ளவைக்கின்றனர்
வன்னி வேளாண் தொழில் நுட்ப நிறுவனத்தினர்

THE VANNI AGROTECHS

ETA LANKA [PVT] LTD.

எம்மண்ணை உணர்ந்த ஈ.ரி.எ (லக்சரு) உரங்களை
அறிமுகம் செய்து
வன்னி வேளாண் தொழில் நுட்ப
நிறுவனத்தினூடாக விநியோகிக்கின்றார்கள்
ஈ.ரி.எ தனியார் நிறுவனத்தினர்.
இவர்களது அனைத்து உரங்களும் பொருண்மிய
விவசாயக் கண்காட்சி அறையில் உள்ளன.




பொருண்மிய விவசாயக் கண்காட்சி

(10340)

MULTIPLEX FARMER
HAPPY FARMER

சூழல் மாசடையாது இருக்கவும், இயற்கையுடன்
நாம் வாழவும் வழிவகுத்தவர்கள்
“மல்டி பிளைக்ஸ்” கம்பனியினர். இவர்களது
நுண்ணூட்டப் பசளைகள், இயற்கை பூச்சி கொல்லிகள்
எம்மண்ணில் அமோக விளைச்சலைத் தந்துள்ளன. இவைகளும்
பொருண்மிய விவசாயக் கண்காட்சி அறையில் உள்ளன.



பொருண்மிய விவசாயக் கண்காட்சி

(10341)

நீர்வழங்கலுக்கும் மின்னிணைப்பிற்கும் சிறந்த ISO தரச்சான்று பெற்ற
உறுதியான குழாய்கள் “டியூரோ” நிறுவனத்தினதாகும். இவர்களது உற்பத்திகள் SLS 147 SLS 935
வன்னிவேளாண் நிறுவனத்தின் ஊடாகவிநியோகிக்கப்படுகின்றது.
இக் குழாய்களும் இணைப்புகளும் பொருண்மிய விவசாயக்
கண்காட்சி அறையில் உள்ளன.

SLSI SYSTEM CERTIFIED ISO 9001

Duro




Duro

பொருண்மிய விவசாயக் கண்காட்சி

(10342)

## தமிழ்ச்செல்வன்.....

தும் விடயத்தில் யு.என். எச்.சி.ஆர். (ஐக்கிய நாடுகளுக்கான மனித உரிமைகள் அமைப்பு) நிறுவனத்தின் தொடர்ச்சியான அளப்பரிய பணியை வெகுவாகப் பாராட்டிய சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள், ஏற்கனவே மீளக்குடியமர்த்தப்பட்ட பல ஆயிரம் மக்கள் இதுவரை தமது பொருட்சேதத்துக்கான எந்தவித அரச உதவியையோ அடிப்படைக் கொடுப்பனவையோ பெற்றுக் கொள்ளாததால், பெரிதும் அவதியுறுவதைச் சுட்டிக் காட்டினார். கிளிநொச்சி சமாதானச் செயலகத்தில் இன்று இடம் பெற்ற இச் சந்திப்பில், ஐ.நா. மனித உரிமைகளுக்கான அமைப்பின் சிறிலங்கா கிளைக்கான தலைவர் திரு.நீல்ஸ் றைற், விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம், அகதிகளை மீளக் குடியமர்த்துவது மற்றும் பராமரிப்பது தொடர்பான தங்களது 2005ஆம் ஆண்டுக்கான திட்டத்தை முன்வைத்தனர். தொடர்ந்தும் சிறிலங்கா அரசு ஆக்கிரமித்திருக்கும் தமிழ் பிரதேசங்களில் பெரும்பகுதிகளை உயர்பாதுகாப்பு வலயங்களாகவே பேணி வருவதனால் பல ஆயிரம் மக்கள் தொடர்ந்தும் பலவித துன்பங்களையும் அனுபவித்து வருவதைச் சுட்டிக்காட்டிய தமிழ்ச்செல்வன், இதுகுறித்துத் தொடர்ந்தும் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் ஒத்துழைப்பையும் முன்னெடுப்புக்களையும் கோரினார். இச்சந்திப்பில் சமாதான செயலகத்தின் செயலாளர் நாயகம் புலித்தேவனும் கலந்து கொண்டார்.

## மீனவர்....

உடனடியாக பாலாவி மீனவர்கள் தீயை அணைத்துக் காயமடைந்த வரைக் காப்பாற்றினர். இதில் காயமடைந்தவர் சம்பவம் பற்றிய உண்மைத் தன்மையினையும் தம்தரப்புத் தவறையும் ஒப்புக்கொண்டார். அதன்பின்

## நோர்வே

கலந்துரையாடல் ஒன்றை ஏற்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. . தற்போது தோன்றியுள்ள நிலைமைக்குப் பரிகாரம் காணும் விதம் பற்றி ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரலுக்கு இரு சாராரும் வரவேண்டும்.

எந்தவொரு நாட்டுக்கும் சொந்தமான கடல் பிரதேசத்தை மற்றொரு சாராருக்கு ஒதுக்க முடியாது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அவ்விதம் செய்திருந்தால், அது நிச்சயம் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயலாகும். தற்போது எழுந்துள்ள நிலைமை தொடர்பில் இரு சாராரும் எம்மை விமர்சிக்கின்றனர். விமர்சனங்களுக்கு முகம்கொடுப்பது எமது கடமைகளில் ஒரு பகுதியாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை றொய்ட்டர் செய்திச் சேவைக்கு நேற்று முன்தினம் அவர் அளித்த செவ்வியில்

கடந்த ஜுலையில் கிழக்கில் 27 கொலைகள் இடம்பெற்றுள்ளன. ஒகஸ்ட் மாதத்தில் மேலும் 12 கொலைகள் அங்கு இடம் பெற்றுள்ளன.

இவை சமாதான முன்னெடுப்புக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்திவிடும். எனவே அனைத்துக் கொலைகளும் நிறுத்தப்பட வேண்டியது அவசியம் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை அரசியல் அழுத்தங்களும் இந்த விடயத்தில் பிரயோகிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்ட அவர் தாம் தமது அழுத்தங்களை உரிய முறையில் பிரயோகித்து வருவதாகவும் தெரிவித்தார். (32)

இச்சம்பவத்தைப் •பயன்படுத்தி குருநகர் மக்களிடையே தேசவிரோத சக்திகளும், சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் மக்களுக்கும் இடையே பிளவை ஏற்படுத்தும் நோக்குடன் கொந்தளிப்பை ஏற்படுத்த முயன்றுள்ளனர். குருநகர் மக்களின் பெயரில் தேசவிரோதிகள் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளனர். இதனையடுத்து நிலைமைகளை தெளிவுபடுத்தும் வகையில் குருநகர் இழுவை மீன்பிடி தொழிலாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் பூநகரி மீன்பிடி சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்களும் நேற்று கலந்துரையாடல் ஒன்றை நிகழ்த்தினார். இதில் நடந்த சம்பவம் பற்றி குருநகர் மீன்பிடித் தொழிலாளர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது. இச்சம்பவம் ஆழ்ந்த கவலையளிக்கும் சம்பவம் என்றும், இப்படிப்பட்ட சம்பவங்களுக்கு இனிமேல்

## அம்பலவன்...

கடலில் குதிக்கும்படி கூறி படகை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

## சிறி...

அதிகாரிகளுடன் அவர் பேச்சுக்களை நடாத்தியுள்ளார்.பின்னர் நேற்றுமாலை முகமாலை முன்னரங்க நிலைப்பகுதிக்கு விஜயம் செய்த அவர் பாதுகாப்பு முன்னரங்க நிலைகளைப் பார்வையிட்டதாகவும் கூறப்படுகின்றது. (27)

வாய்ப்பளிக்கக் கூடாதென்றும் கேணல் சூசை அவர்கள் கேட்டுக் கொண்டார். இதனைப் பயன்படுத்தி தேசவிரோத சக்திகள் மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பிளவை உண்டாக்க மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இடமளிக்கக் கூடாதெனவும் அவர் வேண்டினார். தொழில் ரீதியான பிணக்குகளின் விளைவே இது எனவும் இப்பிணக்கிற்கு காரணமான இழுவை மீன்பிடி இவ் ஆண்டுடன் முற்றாக நிறுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார். மேலும் அது வரையான 3 மாத காலத்திற்குள் மீன்பிடித் தொழிலாளர்களிடையே பிணக்குகள் ஏற்படாது ஒற்றுமையைப் பேண இருதரப்பு மீனவர்களும் இழுவை மீன்பிடித் தொழிலாளர்கள் வாரத்தில் வியாழன், சனி ஆகிய இரு நாட்களில் மின்பிடிக்க அதற்குரிய கடல் எல்லையை வரையறை செய்தனர்.இதன் பின் இரு தரப்பு மீனவர்களும் உடன்பாடு கண்டு சென்றனர்.

இக் கலந்துரையாடலில் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதி ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதில் 500இற்கும் மேற்பட்ட மீனவப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் பின்னர் பீதி காரணமாக கடலில் குதித்த மீனவர்கள் படகின் கீழ்ப்பகுதியில் பிடித்துக் கொண்டு நின்றனர். இதன் பின்னர் படகில் ஏறும்படி கூறிய கடற்படையினர் மிரட்டிவிட்டு படகின் மீது தாக்குதலை மேற் கொண்டனர்.இதனால் படகுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. இதன் பின்னர் அவர்கள் தொழில் முயற்சியில் ஈடுபடாது உடனே கரை திரும்பினர்.சிறிலங்காக் கடற்படையினர் கடந்த சில நாட்களாக மீனவர்கள் மீது அச்சுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக மீனவர்கள் புகார் செய்துள்ளனர். கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (08)


## சாவு அறிவித்தல்

**ஜேக்கப் சூசைப்பிள்ளை (அழகையா மாஸ்ரர்)**

*(இளைப்பாறிய ஆசிரியர், யாழ். மாநகரசபை முன்னாள் உதவி மேயர்)*



யாழ்ப்பாணம், பாஷையூரைச் சேர்ந்த ஜேக்கப் சூசைப்பிள்ளை -அழகையா மாஸ்ரர் 29-08-2004 ஞாயிற்றுக்கிழமை பாஷையூரில் காலமானார்.அன்னார் யோசவீனின் அருமைக் கணவரும், டிவ்னா ராஜினி, றொபேட், றொசாய்றொ (குணம்), அனக்கிளேற்றஸ் (ஜெயம்), றூபேட் (தனம்), வலன்ரைன் (அருள்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும்; இருதயானந்தன் (வில்சன்), அனஸ்ரி, சாந்தினி, சித்திரா, ரேணுகா, விஜி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் பூதவுடல் 04-09-2004 (நாளை) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இல. 797, கடற்கரை வீதி, பாஷையூர் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*797, கடற்கரை வீதி, பாஷையூர்,*
*T.P. : 0777 592600*

(5028)

தகவல்:
**அ. பாலதாஸ்**

## 4ஆம் ஆண்டு நினைவில்



தாயின் மடியில் 15 . 10 . 1976

தாயக மண்ணில் 03 . 09 . 2000

**மேஜர் செந்தூரன் (கண்ணன்)**

[யோகராசா ராஜ்குமார், உப்பளம், ஆனையிறவு]

[இம்ரான் பாண்டியன் படையணி]

எங்கள் அன்புச் செல்வனே
எம்மை விட்டுப்பிரிந்து
நான்கு வருடங்கள் சென்றுவிட்டன.
எங்கள் நெஞ்சிருக்கும் வரை
உன் நினைவுகள் பிரியாது.
உன் இனிய செயல்கள் நிழலாடும் போது
எம்துயரம் ஆறாக ஓடுகின்றது.
என்றும் உன் நினைவுடன்

*தகவல்*
*யோ. குமார் (அண்ணர்),*
*241, மாயவனூர் ,*
*வட்டக்கச்சி.*

(சி.10336)

*அப்பா, அம்மா சகோதரர்,*
*உறவினர், நண்பர்கள்.*

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 1997 - 12 - 30

உதிர்வு 2004 - 08 - 04

**சுசீந்திரராசா சுகீர்த்தனா**

**(கீர்த்தனா)**

அன்போடு பேசிய அழகு முகம் எங்கே?
பண்போடு பேசிய பாசமுகம் எங்கே?
மழலை முகம் மாறாத எம் பாச மகளே?
எம்மோடு நீ வாழ்ந்த கணப்பொழுதின்
நினைவுகளுடன் ஏங்கி நிற்கின்றோம்.

இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக்கிரியைகளில் உற்றார், உறவினர்கள்,நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறோம்.

(5026)

கோவில் முள்ளியான்,
வடமராட்சிகிழக்கு.

தகவல்.
குடும்பத்தினர்



# நினைவலைகள்

**வீரவேங்கை - மாதவி**

**(நடேசன் அனுஜா)**

நாவற்காடு, வரணி

பிறப்பு 10 - 11 - 1984

வீரச்சாவு 03 - 09 - 2000

*தாயகக் கனவுடன் தலைவன் வழி நடந்த*
*என் அன்புச் செல்வமே!*
*நீ உதிர்ந்து ஆண்டுகள் நான்கு ஆன போதிலும்*
*உன் நினைவுகள் என்றும்*
*எம் உள்ளங்களில்.*

*இந் நாளில் மேஜர் மாதவன் மாஸ்ரர், மேஜர் நகுலன், கப்டன் உரவோன், கப்டன் சீதை, வீரவேங்கை சிறி ஆகியோரையும் இவருடன் வீரச்சாவடைந்த மாவீரகளையும் நினைவு கூருகின்றோம்.*

குடும்பத்தினர்

(5029)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.